**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**C.C.No. 13/2014**
**Prosecution Witness P.W. 6**

.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. பொன்ராம் | Calling | : SP (Retired) |
| Father's name | : திரு. வேலுச்சாமி | Religion | : Hindu |
| Village | : -- | Age | : 62/2025 |
| Taluk | : சென்னை | | |

நாள் - **26.09.2025**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் காவல்துறையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளராக பணியாற்றி தற்சமயம் ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 31.12.2002 அன்று அவனியாபுரம் காவல்ஆய்வாளராக பணியில்இருந்த போது, குற்ற எண்.302/2001 பிரவுகள் 39(1), 44 (1) (C) வழக்கை மின்சார சட்டம் 1910ன் கீழ் பதிவு செய்த வழக்கை நான் மேல்விசாரணைக்கு எடுத்துக கொண்டு, இந்த வழக்கில் ஆய்வாளர் திரு.நாடாங்கன் என்பவர் புலன்விசாரணை செய்து வழக்கு தடயஅறிவியல் ஆய்வு அறிக்கைக்காக நிலுவையில் இருந்தது. நான் மேற்படி அறிக்கையை பெற்று, அறிக்கையை அளித்த திருமதி.ஹேமலதா, அலுவலர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். ஆவணங்களின் அடிப்படையில் இவ்வழக்கில் புலன்விசாரணை முடித்து, அதே சட்டப்பிரிவின் கீழ் எதிரி மீது 31.12.2002 அன்று குற்றஇறுதிஅறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்குவிசாரணை**

நான் வழக்கை விசாரணைக்கு எடுத்த அன்றே குற்றஇறுதிஅறிக்கை தாக்கல் செய்தேன் என்றால்சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக நான் எந்த சாட்சியையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் ஹேமலதாவை தவிர வேறு எந்த சாட்சியையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. நான் சம்பவ இடம் சென்று, முந்தைய புலன்விசாரணை அதிகாரி தயாரித்திருந்த பார்வைமகஜர், வரைபடம் சரியா என்று சம்பவ இடத்தை பார்வையிடவில்லை என்றால் சரிதான். தடயஅறிவியல் ஆய்வகத்திற்கு நான் எந்த பொருட்களையும் அனுப்பவில்லை

என்றால் சரிதான். தடயஅறிவியல் ஆய்வகத்திற்கு மேற்படி பொருட்கள் யாரால் எப்போது அனுப்பப்பட்டது என்றால் சார்பு ஆய்வாளர், குற்றப்பிரிவு என்பவர் அனுப்பியுள்ளார், அவர் யார் என்று பெயர் தெரியவில்லை, நான் அவரை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. சாட்சி ஹேமலதா அவர்களுக்கு அழைப்பாணை கொடுத்து விசாரித்தேனா என்றால், நான் சென்றுவிசாரித்தேன். அவரது அலுவலகம் சென்னையில் உள்ளது, நான் சென்னை சென்றுவிசாரிக்கவில்லை, ஏற்கனவே யாரும் விசாரித்திருந்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. நான் இந்த வழக்கில் சரிவர புலன்விசாரணை செய்யாமல், ஆவணங்கள் எதையும் பார்வையிடாமல், அவசரகதியில்புலன்விசாரணைக்கு எடுத்த அன்றே, சாட்சிகள், சான்று ஆவணங்கள் எதையும் பார்வையிடாமல் அரசு நிர்பந்தத்தின் பேரில் ஒருதலைபட்சமாக விசாரணை செய்து, எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM
Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2025.09.29 10:11:49 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.